OS.No. 43/2024
Date : 05 .08.2025
Witness Name & Rank – செல்வராஜ் - PW1

சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் ஏழாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு இந்த வழக்கின் பிரதிவாதி எவ்வாறு பழக்கம் என்றால் அவரிடம் தான் வீடு கட்டுவதற்கு கதவு போன்ற பொருள்கள் வாங்கினேன் அந்த முறையில் எனக்கு பழக்கம். மேற்படி அவரது கடை பெயர் தெரியுமா என்றால் ஹரி ஓம் ஆகும் மேற்படி கடை பிரதிவாதியின் தனிப்பட்ட கடையா அல்லது பங்குதாரர் நிறுவனமா என்றால் அது பற்றி தெரியாது. பிரதிவாதி கடன் வாங்கியதாக சொல்லும் சமயத்தில் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் அதே மரக்கடை தான் வைத்திருந்தார். நான் மேற்படி கடன் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் பிரதிவாதி எந்த கடையில் இருந்தார் என்றால் அவரது கொடுவாய் மரக்கடையில் இருந்தார். கடன் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் பிரதிவாதி எங்கு குடியிருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி கடன் எதற்காக வாங்கியதாக பிரதிவாத என்னிடம் சொன்னார் என்றால் கடையின் அபிவிருத்திக்காக வாங்கியதாக சொன்னார். எனக்கு வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள கடன் வங்கி கணக்கு மூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி தாக்கல் செய்பவர் என்றால் இல்லை.
2. 20,000 க்கு மேல் பணம் கைரொக்கமாக கொடுக்கக் கூடாது வங்கி மூலம் தான் கொடுக்கப்பட வேண்டுமென்ற விதி எனக்கு தெரியுமா என்றால் அப்போது தெரியாது தற்போது தெரியும். மேற்படி பணம் எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்றால் எனது வீட்டில் வைத்து கொடுக்கப்பட்டது. மேற்படி பணம் எனக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்றால் எனது வீட்டில் நான் கையிருப்பாக வைத்திருந்தேன். மேற்படி கடன் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் என்னுடன் யார் இருந்தது என்றால் கடன் கேட்டபோது யாரும் இல்லை கடன் நான் கொடுத்த போது நிலம் வாங்குவதற்காக எனக்குத் தெரிந்த லோகநாதன் வந்திருந்தார் அவர் உடன் இருந்தார். பிரதிவாதி தரப்பில் யார் உடன் இருந்தது

என்றால் பிரதிவாதி தனியாகத்தான் வந்தார். வட்டித்தொகை யார் நிர்ணயம் செய்தது என்றால் நான் தான் சொன்னேன். கடனுறுதிச்சீட்டை எழுதுவதற்கு யார் சொன்னது என்றால் பிரதிவாதி எழுதி வந்தார். கடன் உறுதி சீட்டை எழுதியவர் இவர்தான் என எதுவும் மேற்குறிப்பு செய்து கையொப்பம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3. என்ன கிழமை பணம் கொடுக்கப்பட்டது என்றால் வியாழக்கிழமை கொடுக்கப்பட்டது. நான் பணம் கொடுத்த போது என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் விவசாயம் செய்து வந்தேன். நான் பணம் கொடுத்தபோது வளர்மதி என்ற பெயரில் நிதி நிறுவனம் நடத்தி வந்தேன் என்றால் சரியல்ல. நான் நடத்தி வந்த நிதி நிறுவனத்தின் மூலம் சீட்டு நடத்தி வந்தேன் அதில் பிரதிவாதியும் அவரது அண்ணனும் பொங்கலுக்கு சீட்டு போட்டு இருந்தார்கள் என்றால் சரியல்ல. 15/1/2017 ஆம் தேதி தொடங்கப்பட்ட 2 லட்சம் ரூபாய் சீட்டில் அவர்கள் இணைந்து கொண்டனர் என்றால் சரியல்ல. மாதம் 10,000 சந்தா தொகை செலுத்தி வந்தனர் என்றால் அவ்வாறு எந்த சம்பவமும் இல்லை. மேற்படி சீட்டில் மூன்று மாதம் கழித்து ஐம்பதாயிரம் தள்ளி ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் எடுத்தனர் என்றால் சரியல்ல. நான் பொதுவாக எனது நிதி நிறுவனத்தில் சீட்டு எடுப்பவர்களிடம் பாதுகாப்பிற்கு ஆதரவாக கையொப்பம் பெறப்பட்ட கடனுறுதிச்சீட்டு நிரப்ப படாத வங்கி காசோலைகள் பெற்றுக் கொள்வது வழக்கம் என்றும் எனவே அதன் அடிப்படையில் பிரதிவாதியிடமும் கையொப்பமிட்ட நிரப்பப்படாத மூன்று காசோலைகள் 2 கடன் உறுதி சீட்டுகள் பெறப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல் பிரதிவாதியின் அண்ணனிடமும் வெற்று காசோலைகளும் கடனுறுதி சீட்டுகளும் பெறப்பட்டது என்றால் சரியல்ல.

4. மேற்படி சீட்டை எடுத்த பிறகு பிரதிவாதிகளும் அவரது அண்ணனும் சரியான நேரத்தில் அதற்குண்டான சந்தா தொகையை செலுத்தவில்லை என்றால் சரியல்ல அதன் பிறகு மொத்த சீட்டுத் தொகையும் செலுத்தி விட்டார்கள் என்றால் சரியல்ல இருந்து நான் பெற்ற வெற்று கடன் உதவி சீட்டை வைத்து பிரதிவாதிக்கு எதிராக தவறான இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி காலதாமதமான தவணைத் தொகைக்கு நான் கூடுதல் ஒரு லட்சம் வட்டி கேட்டு தான் அதை பிரதிவாதிகள் தர மறுத்ததால் இந்த வழக்கு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இன்னும் பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த கடனுறுதிச்சீட்டு காசோலைகள் என்னிடம் உள்ளது என்றால் இல்லை சரியல்ல. பிரதிவாதிடம் நான் அதிக லாபம் அடைய வேண்டி இந்த தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சட்டப்படியான கடன் எதுவும் இந்த வழக்கில் இல்லை என்றும் எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ள லோகநாதன் எனது நண்பர் என்றால் அவர் பக்கத்தில் வீட்டை வாங்கி உள்ளார் எனது நண்பர் அல்ல நான் சொல்வது தவறு என்றும் எனது நண்பர் என்றும் எனது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் பிரதிவாதி கடனுறுதிச்சீட்டை எழுதவும் இல்லை கையொப்பம் செய்யவும் இல்லை என்றும் மேற்படி கடனுறுதிச்சீட்டு ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.